தலைப்பு 287 - காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) காணி உரித்து நிர்யணத் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 480,085,286 ஆக இருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 464,499,639 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 15,585,647 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானமற்ற பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். | இணங்கவில்லை. மீளாய்வாண்டிற்காக காசாகப் பெற்ற வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 462,329,338 ஆகும். |
| (ஆ) மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 3,803,791 மற்றும் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 3,824,268 காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. அக்காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 20,477 ஆல் அதிகரித்துக் | சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்புக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | அது உள்ளடக்கப்பட வேண்டியதுடன் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலில் வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றங்களின் கீழ் என்பதனால் அதில் பணமாக மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகளான ரூபா 136,297 மற்றும் பணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளான ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. | | 3,795,537 தொகையின் வித்தியாசமான ரூபா 3.659,060 இனை உள்ளடக்கி காசுப் பாய்ச்சல் திருத்தப்பட்டுள்ளது. |
| (இ) | மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கொடுப்பனவு ரூபா 21,313,532 மற்றும் முற்பணங்களை மீள் அறவீடு செய்தல் ரூபா 23,447,712 தொகைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்களை மீள அறவீடு செய்தல்கள் உள்ளடக்கப்பட்டதானது ஆளணி ஊதியங்கள் மற்றும் செயற்பாட்டு செலவுகளின் கீழாகும். எனினும் உபகரணங்களை அறவீடு செய்தலின் கீழ் பணமாக அறவீடு செய்தல்களாக ரூபா 318,658 தொகையும் ஏனைய முதலீடுகளின் கீழ் ரூபா 14,753,184 தொகையும் உள்ளடக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று திருத்தப்பட்டிருந்தது. |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணைக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்க கூற்றுக்களின் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 121,237 மீதி 02 ஆண்டுகளை அண்மித்த காலம் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 மார்ச் 29 ஆந் திகதி ஓய்வு பெற்றுள்ள இந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவின் போது அறவீடு செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஓய்வு பெறுவதற்குத் தேவையான ஆவணங்களை தனிப்பட்ட கோவைகளுக்கு ஒப்படைக்கப்படாமையின் காரணமாக உரிய கோவைகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு இன்றுவரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் நில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கட்டிடங்களிலுமுள்ள மின்சார துணைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்படுவதும் அவற்றின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) நட்டங்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களில் குறிப்பிட்டவாறு வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டில் பதியப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | பொறுப்புக்கள் பதிவேடு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்பொழுது பேணப்பட்டு வருவதனால் தனியான ஒரு பதிவேடு பேணப்படுவதற்கான அவசியம் இல்லை என்பதனைத் தெரியப் படுத்துகின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஈ) அடியிதழ் புத்தக வெளியீடு<br>-------------------------------------------<br>நிதிப்பிரமாணத்தின் 341 இன் பிரகாரம் அடியிதழ் புத்தக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | பிரமாணங்களின் பிரகாரம் ஜீ.ஏ.என் 20 படிவத்திலுள்வாறு அடியிதழ் புத்தக பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (உ) வாகன சம்பவ குறிப்பு புத்தகம்<br>-------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | சம்பவக் குறிப்பு புத்தகத்தை நாளதுவரையாக்குதல் வேண்டும். | தவறுதலாக நில குறிப்புக்களை சம்பவக் குறிப்பு புத்தகத்தில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் முடியுமான அளவு விரைவாக அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**கணக்காய்வு அவதானிப்பு**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனாநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 104(4) | நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 மே மற்றும் 2018 பெப்ரவரிகளில் விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | முறையான அவதானமின்றி செயற்பட்டதன் காரணமாக இந்த விபத்துக்கள் சம்பந்தமாக முடிவுறுத்தப்பட வேண்டிய விசாரணை உரிய காலப்பகுதிக்குள் இடம்பெற்றிருக்க வில்லை. எதிர்காலத்தில் விசாரணைகளை நிதிப்பிரமாணம் 104(4) இன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தமாக பிரதான திருத்தங்கள் செய்த்ததன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்களுக்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும், 35 வாகனங்களுக்கு அவ்வாறு எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். | ஒரு வாகனத்திற்கு எரிபொருள் பரிசோதனை பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும், தவறுதலாக சம்பவக் குறிப்பு புத்தகத்தில் பதியப்பட்டிருக்க வில்லை எனவும் எரிபொருள் பரீட்சிப்பதற்கு முடியாத மற்றும் எரிபொருள் பரீட்சிக்கப்படுகின்ற கால எல்லையை மிகைத்து அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் பரிசோதனையை நிர்ணயிக்கப்பட்டவாறு எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சந்தையில் அமுல்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திடமிருந்து விலை மனுக்களை கோருவதன் மூலம் காப்புறுதி உள்ளடக்கத்தை கவனித்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான விலைமனுக்கள் கோரப்படாது திணைக்களத்திற்குச் சொந்தமான 14 வாகனங்கள் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணங்குகின்றேன். இதற்குப் பின்னர் இத் திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களுக்குமாக 04/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்த அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திடமிருந்து விலைமனுக்களை கோருவதன் மூலம் காப:புறுதி உள்ளடக்கத்தை கவனத்தில் |

| | | |
|---|---|---|
| நிதியத்திலும் ஏனைய 25 வாகனங்கள் வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திலும் பூரண காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. | | கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 5,685,000 நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 1,688,338 தொகை அதாவது 30 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு செய்தல் வேண்டும். | உள்நாட்டு பிரயாணச் செலவுகளை மட்டுப்படுத்தல்களும் சீருடைப் படிகளுக்காக மேலதிகமாக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீடு தயாரித்தலும் 03 கெப் வாகனங்கள் ஆண்டின் போது முறையாக ஓடுவதற்கு ஈடுபத்தாமையும் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

(அ) திணைக்களத்தினால் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச்செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இலக்குகளைத் தோற்றுவிக்கும் போது திணைக்களத்திற்குச் சொந்தமான வளங்களின் இயலளவு மற்றும் சாத்தியவளம் முதலிய காரணிகளை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது திட்டம் தயாரிக்கப்பட்டதன் காரணமாக | இலக்கினை உருவாக்கும் போது முன்னைய ஆண்டின் செயல் முன்னேற்றம், நிறுவனத்தின், சாத்திய வளம் முதலிய அத்தியாவசதிய காரணிகள் கவனித்துப் பார்த்தல் வேண்டும். | திணைக்களத்தின் இலக்குகள் கட்டியெழுப்பப் படுவதானது நில அளவையாளர் திணைக்களத்தின் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டேயாகும். 2018 ஆம் ஆண்டின் போது நில அளவையாளர் திணைக்களத்தின் இலக்குகளானது 96,000 காணித் துண்டுகளாக |

| | | |
|---|---|---|
| இலக்கிடப்பட்ட அளவினை மிகைத்து செயலாற்றல் 114 சதவீதத்திலிருந்து 152 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தது. | | இருந்ததனால் அதற்கு நேரொத்த வகையில் திணைக்களத்தின் இலக்குகளும் திட்டமிடப்பட்டுள்ளன. |

**3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகளை தீர்த்து வைத்தல் கட்டளைச்சட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் அளவீடு செய்து பரீட்சிக்கும் இலக்குகளானது 15 கிரமங்களாக இருந்த போதிலும், 05 கிராமங்கள் மாத்திரம் பரீட்சித்தல் முடிவுறுத்தப்பட்டுள்ளன. | திட்டமிடப்பட்டவாறு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணிகளின் வரைபடங்களைத் தயாரித்தல் தொடர்ச்சியாக தாமதித்ததன் காரணமாக அதிகாரச்சட்டத்தின் பிரதான கட்டத்தில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் போது செயல் முன்னேற்றம் மாற்றமடைந்துள்ளது. |
| (ஆ) | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இறுதியளவில் 16 ஆண்டுகள் கடந்திருந்தும் அந்நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் 57 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய மொத்தமாக 3659 கிராம சேவகர் பிரிவுகளில் நில அளவை நடவடிக்கைகளானது 1695 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் அதாவது 46 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | 3659 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்பட்டிருந்தும் நில அளவையாளர் திணைக்களத்தின் மற்றும் இத்திணைக்களத்தின் வளங்களை ஈடுபடுத்தும் சாத்திய வளத்திற்கும் பதவியணியினரின் இயலுமைக்கும் இணங்க செயற்பாடுகளை ஆரம்பிக்கின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது. |
| (இ) | உரிமைகளை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில் 2018 ஆம் ஆணடின் போது 34,428 கோவைகள் பின்தள்ளி வைக்கப்பட்டுள்ளதுடன் 2018 | பின்தள்ளி வைக்கப்பட்ட கோவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அவசர வேலைத் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். புலனாய்வு நடவடிக்கைகளின் போது சிக்கலான கோவைகள் பின்தள்ளி வைக்கப்பட வேண்டியதுடன் பின் தள்ளி |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 வரை அவ்வாறு பின்தள்ளிவைக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 414,543 ஆகும். இவ்வாறு பின்தள்ளி வைக்கப்பட்ட கோவைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் தயாரிக்காமையின் காரணமாக தீர்த்து வைக்கப்படும் செயற்பாட்டை நிறைவேற்றுவது தாமதமடைந்துள்ளது. | திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வைக்கப்பட்ட கோவைகளை மீண்டும் புலனாய்வு செய்ததன் பின்னர் மேலும் சிக்கல் உள்ளதாக இருந்தால் மீண்டும் பின்தள்ளி வைக்கப்பட வேண்டி ஏற்படும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஓடுவதற்கு முடியாத நிலையிலுள்ள வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களைத் திருத்தம் செய்து ஓடுவதற்கும் ஈடுபடுத்துதல் வேண்டும் எவ்வாறாயினும், ஜீப் வண்டி ஆண்டு முழுவதும் செயற்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த வாகனம் 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டு ஓடுவதற்காக ஈடுபடுத்தப்படுவதற்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதனால் அது தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அமைச்சு செயலாளரால் இந்த வாகனத்தை திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக நன்மைபயக்கக் கூடியதல்ல எனத் தெரிவித்து திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. |

## 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வானது தலைமை | பொருள் மீளாய்வு வெளிப்படுத்திய | பொருள் மீளாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தின் 03 ஆம் இலக்கம் தொடர்பாகவும், 14 பிரதேச அலுவலகங்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தப்பட்ட 72 கணனியும் உபகரணங்களும், 34 தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும், 08 மின்சார உபகரணங்கள்களும் உள்ளடங்கலாக 151 பொருள் பற்றாக்குறைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 105 இன் பிரகாரம் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களை நிர்ணயித்து நட்டத்தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்டங்கள் சம்பந்தமாக ஏடுகளிலிருந்து பதிவழிப்பது தொடர்பான கூற்றுக்களிலும் காட்டப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமாக உரிய பிரிவுகளிலிருந்து காரணம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அக்காரணம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அது சம்பந்தமாக விளக்கமளித்தல்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியனியினர் 2112 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 825 ஆக இருந்ததனால் அங்கீகரித்த பதவியணியில் 61 சதவீதம் வெற்றிடமாக இருந்தன. 90 பிரதேச அலுவலகங்களைச் செயற்படுத்துவதற்காக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் நிகழ்காலத்தில் 43 பிரதேச அலுவலகங்கள் மாத்திரம் செயற்படுத்தப்படுவதன் மூலம் அங்கீகரித்த பதவியணியினரைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை இவ்வாறு அதிக அளவில் வெற்றிடங்களின் எண்ணிக்கை காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. | 43 பிரதேச அலுவலங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டவாறு பதவியணியினரைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிகழ்கால சேவை நிலைமையின் பிரகாரம் 43 அலுவலகங்களுக்காக போதியளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க நிருவாக அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |